**அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2019**

அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஜயூடிபி) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரென்ஜ் முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 01 ஆந் திகதிய சீஎல்கே-100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவு மற்றும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.4 ஆம் திருத்தப்பட்ட பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையானது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை கொண்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவர்கள் கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (ஏஜயூடிபி) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பிரதேசங்களிற்கிடையில் களத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்குடன் இணைந்த அபிவிருத்தியின் நடுநிலையிலான விதத்தினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52.00 மில்லியன் அபிவிருத்திக்கான பிரென்ஜ் முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டுக் குறைபாடு | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான ரூபா 3.99 மில்லியன் அட்டுறு செலவினங்கள் பேரேட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான சரியான பேரேட்டு மீதி காட்டப்பட்டிருக்காததுடன் அட்டுறு செலவினம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டம் காசு அடிப்படையில் பேரேட்டை பேணுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | கூறு | நடவடிக்கை | கணக்காய்வு விடயம் | விளைவு | தாமதங்களிற்கான காரணம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | அநுராதபுர நகரத்தில் நிலைபேறான நகர உட்கட்டமைப்பை இனங்காணுதல் | விபரமான வடிவமைப்பு ஆய்வு மதியுரைச் சேவை | செயற்திட்டம் ஆரம்பித்த பின்னர் 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் விபரமான வடிவமைப்பு ஆய்வை சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் மதியுரை அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு செயற்திட்ட பதவியணியினரிற்கு போதியளவு நிபுணத்துவ அறிவு காணப்படாததால் உரிய நேரத்தில் மதியுரை அறிக்கைகளை மீளாய்வு செய்யத் தவறியமை காரணமாக ரூபா 7,460.35 மில்லியன் (யூரோ 47.6 மில்லியன்) ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி அமுல்ப்படுத்தப்பட வேண்டிய விபரமான நடவடிக்கைகளை தயார்செய்வதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது. | ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்தல் காலம் நீடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இதன் விளைவாக செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நேர அட்டவணையையும் இது பாதிக்கும். | மதியுரையாளர் அறிக்கைகளை மீளாய்வு செய்ய தவறியமை | நிபுணத்துவ இடைவெளி காரணமாக இரண்டு பிரதான திட்டங்கள் மற்றும் இரண்டு சாத்தியவள அறிக்கைகளிற்காக மாத்திரமே மீளாய்வு செயன்முறை தாமதமாக ஏற்பட்டிருந்தது. | முக்கிய நிபுணர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அநுராதபுர நகரத்தில் நிலைபேறான நகர உட்கட்டமைப்ப | விபரமான வடிவமைப்பு ஆய்வு மதியுரைச் சேவை | 15 மாத தாமதத்தின் பின்னர் 2020 சனவரி 03 இல் மதியுரை நிறுவனம் அறிக்கையை சமர்ப்பித்திருந்த போதிலும் அறிக்கையில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதன் காரணமாக | ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்தல் காலம் நீடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இதன் விளைவாக | மதியுரையாளரின் மோசமான செயலாற்றல் மற்றும் மேற்பார்வை காணப்படாமை | தாமதக் கட்டணங்களை அறவீடு செய்யும் போது பிற்சேர்ப்பு நிதியேற்பாடு பயன்படுத்தப்படும். | மதியுரை உடன்படிக்கை வழிகாட்டல்கள் தாமதக் கட்டணங்களை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| இனங்காணுதல் | செயற்திட்டம் அறிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இதன் விளைவாக உரிய திகதிகளில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் மேலும் தாமதமாகும். மதியுரை உடன்படிக்கையின் 46.2 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதங்களிற்கான செல்லுபடியாகும் காரணங்களாக மதியுரையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட காரணம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தது. இது தொடர்பாக தாமதங்களிற்கான தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு செயற்திட்ட உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நேர அட்டவணையையு ம் இது பாதிக்கும். | செய்வதற்கு பின்பற்றப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதங்கள், உரிய நேரத்தில் விபரமான மதியுரை அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக ஏற்பட்ட பின்விளைவுகளை குறைக்கும் பொருட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 748.5 மில்லியன் கிரயத்தில் இனங்காணப்பட்ட 05 quick win உப செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளன. எனினும் கேள்வி ஆவணங்கள் | நிர்மாணங்களில் தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயங்கள் அதிகரிப்பதுடன் செயற்திட்டக் காலப்பகுதி நீடிப்பு செய்யப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் அக்கறையுடையோரின் பிரச்சனைகள் காரணமாக பிரதானமாக Quick win packages தாமதமடைந்திருந்தன. | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

இறுதியாக்கப்பட்ட பின்னரும் அவ் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் கடனளிக்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 225.10 மில்லியனிற்குச் சமமான யூரோ 1.40 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டுகள் கடந்த பின்னர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 204.25 மில்லியனிற்கு சமமான யூரோ 1.72 மில்லியன் தொகை முன்னைய ஆண்டில் செயற்திட்டத்தால் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முற்பணமெதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 94.37 மில்லியனிற்கு சமமான யூரோ 0.58 மில்லியன் தொகையான முற்பணம் பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்கில் காணப்பட்டது. | பட்டியலிடப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்ததன் விளைவாக நிதிகளின் குறைப்பயன்பாடு. | இணங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் விபரமான வடிவமைப்பிற்கான மதியுரையில் தாமதம் காரணமாக குறைவான பயன்பாடு ஏற்பட்டிருந்தது. | நிதிகளை செயற்திறனாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் பொருட்டு செயற்திறன்மிக்க வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 பதவிகளை கொண்டிருந்ததுடன் அதில் நகர மரபுரிமை நிபுணர் ஒருவர், 3 உதவி செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் 4 சிரேஷ்ட முகாமைத்துவம் உள்ளடங்கலாக 10 பதவிகள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிடமாக காணப்பட்டன.

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அநுராதபுர உப – செயற்திட்டத்தின் மேலதிக செயற்திட்ட பணிப்பாளரின் வதிவிடமாக பயன்படுத்துவதற்கு வாடகை அடிப்படையில் வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு கோரப்பட்ட ஒத்த கூறுவிலையை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட அலுவலகத்திற்கான வீடொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. அலுவலக வளாகங்களை வாடகைக்கு வழங்குவதற்கு 2018 நவம்பர் 14 இல் முற்பணமாக ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2020 மே வரை அலுவலக வளாகங்களிற்காக குறித்த வீட்டை வாடகைக்கு வழங்குவதற்கும் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந் நடைமுறை அரசாங்க பிரமாணத்தை மீறியிருந்ததுடன் அத்தகைய நடவடிக்கை அரச நிதிகளை தவறாக பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும். | வீடொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான முற்பணக் கொடுப்பனவு – செயற்திட்டப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட பல ஞாகமூட்டல்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்காது ரூபா 100,000/- முற்பணக் கொடுப்பனவை மீளளிப்பதற்கு கட்டிட உரிமையாளர் இறுதியாக மறுத்திருந்தார். இது தற்போது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சிற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |